# வைரமுத்து கவிதைகளில் வடிவம்

**முனைவர். மா. முரளி,**

*உதவிப் பேராசிரியர்,*

*தமிழ்த்துறை,, காமராஜ் கல்லூரி,, தூத்துக்குடி-628 003.*

## முன்னுரை

இலக்கியங்களை ஓர் சமூக ஆவணம் எனலாம். சமுதாயத்தில் காணப்படும் அவலங்களை எடுத்துக்காட்டாத கவிஞனே இல்லை. சமுதாயப் பிரச்சனைகளை தமது பிரச்சனைகளாகக் கொண்டு தமது கவிதைகளில் வெளிப்படுத்துபவரே உண்மையான கவிஞன். அத்தகைய கவிஞர்களுள் ஒருவர் வைரமுத்து. இன்றைய வாசகர்களிடம் தனியொரு சிறப்பிடத்தைப் பெற்றிருப்பவர். கவிதை என்ற கலை வடிவத்தை இனம் காண்பதற்கு உருவம் மிக இன்றியமையாததாகும். கவிஞன் தன் கருத்தினை வெளியிடுவதற்கும் அது வாசகனிடத்தே சென்று ஏற்படுத்தும் தொடர்புக்கும் ஓர் உருவம் தேவையாகும். இலக்கியத்தில் உருவம் என்பது இலக்கியத்தின் புறவடிவம் அல்லது அமைப்பு எனலாம். அந்த வகையில் வைரமுத்துவின் கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள வடிவம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## வெண்பா

வெண்பாவில் முதலடி நான்கு சீர்களைப் பெற்று வரும். இறுதியடி மூன்று சீர்களைப் பெற்று வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வந்தால் அது நேரிசை வெண்பா ஆகும். 'நண்பா உனக்கொரு வெண்பா' என்ற தலைப்பில் உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் உருவாவதைப் பற்றி கவிஞர்,

"போதை மருந்தில் பொருந்தாத இன்பத்தில்
பாதை வழுவிய பாலுறவில் - காதைக்
கழுவாத ஊசி கழிவு ரத்தத்தில்
நுழையும் உயிர்க்கொல்லி நோய்"[1]

என்று வெண்பா யாப்பில் பாடியுள்ளார்.

ஆசிரிய விருத்தம்

ஆசிரியப்பா குறைந்தது மூன்றடிகளைப் பெற்று வரும். அகவலோசை பயின்று வரும். இவற்றுள் ஆசிரிய விருத்தம் என்பது கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வரும். ஐந்திற்கு மேற்பட்ட சீராய் வரும் அடியெல்லாம் கழிநெடிலடி எனப்படும்.

'கேள் மனமே கேள்' என்ற தலைப்பில் கவிஞர் அவர்தம் விருப்பங்களை,

"சத்தங்கள் இல்லாத தனிமை கேட்பேன்
சரஞ்சரமாய் வந்துவிழும் வார்த்தை கேட்பேன்
ரத்தத்தில் எப்போதும் வேகம் கேட்பேன்
ரகசியங்கள் இல்லாத வாழ்க்கை கேட்பேன்
சுத்தத்தைக் கொண்டாடும் சூழல் கேட்பேன்
சுடர்விட்டுப் பொலிகின்ற ஞானம் கேட்பேன்
யுத்தங்கள் இல்லாத உலகம் கேட்பேன்
உலகெங்கும் சமபங்கு மழையைக் கேட்பேன்"[2]

என்று அடிதோறும் எண்சீர்களை அமைத்துப் பாடியுள்ளார். இது எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.

சிந்து

தனிச்சொல் பெற்றும், பெறாததும் சந்தநயம்பட அமைந்த பாடல்களையெல்லாம் சிந்து பாடல்கள் என்று அழைத்தனர்.

சூரியனும் பூமியும் உள்ளவரை காதலும் நிலைத்திருக்கும் என்பதை கவிஞர்,

"சூரியக் கடைசிக் கதிர் -புவி
சுடுகின்ற காலம் வரை
காரியம் நடந்திருக்கும் - மெய்க்
காதலும் வளர்ந்திருக்கும்"[3]

என்ற கவிதை அடிகள் வாயிலாகப் புலப்படுத்துகிறார். இது தனிச்சொல் பெற்று வந்த சமனிலைச் சிந்தாகும்.

புதுக்கவிதை

இருபதாம் நூற்றாண்டில் கிடைத்த ஒரு புதிய இலக்கிய வடிவம் புதுக்கவிதை ஆகும். '1947 ஆகஸ்ட் 15' என்ற தலைப்பில் அமைந்த கவிதையை புதுக்கவிதை வடிவத்திற்கு சான்றாகக் கூறலாம். நாடு சுதந்திரம் அடைந்த பின்னும் இந்திய மக்களின் வறுமை தீர்ந்த பாடில்லை என்பதை,

"அவன்
ஒரு
பட்டு வேட்டி பற்றிய
கனாவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது"[4]

என்று சித்தரித்தும் காட்டியுள்ளார்.

ஹைகூ கவிதைகள்

புதிய இலக்கிய வடிவங்கள் காலந்தோறும் தோன்றுவது இயல்பு. இந்த வகையில் ஜப்பானிலிருந்து பெறப்பட்ட ஹைகூ மூன்றடிகளால் ஆனது. இக்கவிதை வடிவத்தை வைரமுத்து தமது கவிதைத் தொகுப்பில் பயன்படுத்தியுள்ளார்.

காதலன் தன்னுடைய காதலியின் செயல்களை இயற்கை நிகழ்ச்சியோடு இணைத்து

"பூமிக்கு வெளிச்சம்
ஓ
நீ கண் திறந்துவிட்டாய்
பூவில் பனித்துளிகள்
இது கூடத் தெரியாதா?

முகம் கழுவுகிறாய்”[5]

என்று ஹைகூ வடிவ அமைப்பில் வருணித்துப் பாடுவதாக அமைத்துள்ளார்.

நாட்டுப்புற வடிவம்

நாட்டுப்புற இலக்கியம் என்பது எழுதப்படிக்கத் தெரியாத பாட்டாளி மக்களின் இன்பத்திலும், துன்பத்திலும் தம் உணர்வுகளை வெளிப்படுத்திய இலக்கியச் சுவடுகளாகும். தேர்வில் தோல்வியுற்ற ஒரு கிராமத்து இளைஞனின் தற்கொலையைக் கண்டு அவனது தாய் புலம்பிய புலம்பலை,

“வீட்டுக்கு ஒத்த மகன்
வெயில்படாம வளத்த மகன்
எழுத்தாணி புடிச்ச மகன்
ஏச்சுப் புட்டுப் போனானே
வக்கனையா ஒக்காந்து
மார்க்கெழுதும் வாத்தியாரு
சிக்கனமா இல்லாட்டிச்
செத்திருக்க மாட்டானே”[6]

என்று கவிதையாக்கியுள்ளார்.

முடிவுரை

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் கவிஞர்களில் தன்னிகரற்று விளங்கும் வைரமுத்து தமது கவிதைத் தொகுப்பில் வெண்பா, ஆசிரிய விருத்தம், சிந்து போன்ற செய்யுள் வடிவங்களையும், தற்காலக் கவிதை வடிவங்களான புதுக்கவிதை மற்றும் ஹைகூ கவிதை வடிவங்களையும், நாட்டுப்புறப்பாடல் வடிவங்களையும் பயன்படுத்தி கவிதைகளைப் படைத்துள்ளார். அதன் மூலம் அவர் பழமையைப் பேணிக்காப்பவராகவும், புதுமையை வரவேற்பவராகவும் திகழ்கிறார். மேலும் ஒரு நல்ல கவிஞரால் எந்த வடிவத்திலும் கருத்துள்ள கவிதையைப் படைக்க இயலும் என்பதற்கு அவர் பயன்படுத்தியுள்ள கவிதை வடிவங்களே சான்று கூறுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. **வைரமுத்து கவிதைகள்**, ப. 741.
2. **மேலது**, ப. 579.
3. **மேலது**, ப. 836.
4. **மேலது**, ப. 271.
5. **மேலது**, ப. 306.
6. **மேலது**, ப. 822.

## துணை நூற்பட்டியல்

1) சண்முக சுந்தரம் - வைரமுத்து இலக்கியத்தடம்,
காவ்யா பதிப்பகம்,
14, முதல் குறுக்குத்தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

2) அரங்கராசு - தமிழ்ப் புதுக்கவிதை - ஒரு திறனாய்வு,
மூன்றாம் உலகப் பதிப்பகம்,
கோவை.

ஆசிரியர் விவரங்கள்



**முனைவர். மா. முரளி,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**காமராஜ் கல்லூரி,**
**தூத்துக்குடி**-628 003.